දුරකථන) 2698475
தொலைபேசி)
Telephone) 2698507

ෆැක්ස්) 2692913
பெக்ஸ்) 2694860
Fax)

විද්‍යුත් තැපෑල)
மின்னஞ்சல் முகவரி) postmaster@health.gov.lk
e-mail)

වෙබ් අඩවිය)
இணையத்தளம்) www.health.gov.lk
website)

මගේ අංකය)
எனது இல) NCD/72/2013
My No.)

ඔබේ අංකය)
உமது இல)
Your No.)

දිනය)
திகதி)
Date) 2013.10.

සුවසිරිපාය
சுவசிறிபாய
SUWASIRIPAYA
සෞඛ්‍ය අමාත්‍යාංශය
சுகாதார அமைச்சு
Ministry of Health

பொது சுற்றறிக்கை இலக்கம் : 02-156/2013
எனது இலக்கம்:
சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அலுவலகம்,
கொழும்பு-10.
2013.09.02

மாகாண சுகாதார செயலாளர்கள்,
மாகாண/பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்,
போதனா வைத்தியசாலைகள் பணிப்பாளர்கள்,
மாகாண வைத்தியசாலைகளின் வைத்திய அத்தியட்சகர்கள்,
நிறுவனத்தலைவர்கள் அனைவருக்கும்,

தேசிய விஷத் தடுப்பு வாரம் - 2013 ஒக்ரோபர் 28 -நவம்பர் 03.

தேசிய விஷத் தடுப்பு வாரம் தேசிய நஞ்சியல் மற்றும் விஷத் தரவுகள் நிலையத்தினால் 2007 ஆம் ஆண்டில் இருந்து கிரமமாக நடத்தப்பட்டு வருகிறது. அதனூடாக விஷத்தடுப்பு மற்றும் சிகிச்சைகள் தொடர்பில் பொது மக்களுக்கும், சுகாதார துறையுடன் சம்பந்தப்பட்ட சகலருக்கும் அறிவூட்டப்படுகிறது.

விஷ மருந்துகள் உட்கொள்வதன் மூலம் ஏற்படும் மரணங்கள் மற்றும் நோய் வாய்ப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வது அவதானிக்கப்பட்டுள்ளது. சுகாதார அமைச்சின் மருத்துவ புள்ளிவிபர தரவுகளின் படி நஞ்சு உட்கொள்வதன் காரணமாக வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படும் நோயாளர்களின் எண்ணிக்கை 2010இல் 117,604 பேராக பதிவாகியுள்ளது. அதில் 1203 பேர் மரணமடைந்துள்ளனர்.இத்தொகையில் 54,998 நபர்கள் பூச்சி கொல்லி மருந்துகளாலும் 20,460 பேர் போதை வஸ்துகள் மற்றும் ஏனைய விஷ மருந்துகளை உட்கொண்டதன் மூலமும் சோயாளர்களாக உள்ளனர்.மேலும் பாம்புக்கடியினால் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 42,146ஆகும்.அதில் 88 பேர்கள் மரணமடைந்துள்ளனர். மற்றும் சிறுவர்கள் மத்தியில் தவறுதலாக விஷ மருந்துகளை உட்கொள்வோரின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

இவற்றுக்கு மேலாக சுற்றாடலுக்கு வெளியேற்றப்படும் கழிவுப் பொருள்களும் சுகாதாரத்திற்கு பெரும் கேடாகவே உள்ளது.அதாவது கடினமாக உலோகங்களின் கழிவுகள்,இலத்திரனியல் கழிவுகள்,அங்கிகளின் கழிவுகள் மற்றும் விவசாய இரசாயனக்கழிவுகள் என்பவற்றால் ஏற்படும் நச்சுத்தன்மை மற்றும் உணவுகளுக்கு சேர்க்கப்படும் துணைப் பொருட்களால் ஏற்படும் நச்சுத்தன்மை,கைத்தொழில் மயமாகுவதால் ஏற்படும் நீர் மாசடைதல்,வளி மாசடைதல்,மண் மாசடைதல் போன்றவை பிரதான இடம் வகிக்கின்றது.ஆகையால் இந்த சுற்றாடலுக்கு வெளியேற்றப்படும் கழிவுகள் யாவும் மட்டுப்படுத்தப்பட வேண்டியதுடன்,சுற்றாடலில் காணப்படும் நச்சுத்தன்மை கொண்ட பொருட்கள் யாவும் சரியான முறையில் சுற்றாடலில் இருந்து அகற்றப்பட வேண்டும்.

சிகிச்சை தொடர்பாக தேவையான வசதிகள் மற்றும் கல்வியறிவுடனான சுகாதார சேவைகள் நிறுவனங்களின் முறைமைகள் விழிப்புணர்வூட்டும் ஆற்றலைக் கொண்ட மக்கள் உள்ள இலங்கையில் இவ்வாறான நிலைமை உடனடியாக கவனத்தில் கொள்ளப்பட வேண்டும் என்ற விடயத்திற்கு உங்கள் கவனத்தை ஈர்க்கும் வகையில் இச்சுற்றறிக்கை வெளியிடப்படுகின்றது.

இந்த நிலைமையைக் குறைப்பதற்கான திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு விபத்தைத்தடுக்கும் தேசிய ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.அதன்படி வருடாந்த செயற்திட்ட பிரதான கூறு ஒன்றாக தேசிய விஷத்தடுப்பு வாரம் ஒன்றை பின்வருமாறு நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதி :- 2013 ஒக்ரோபர் 28-நவம்பர் 03.

தொனிப் பொருள் :- "சுற்றாடலும் விஷமும்"

நோக்கங்கள் :-

1. நஞ்சு உட்கொள்வதால் ஏற்படக்கூடிய அபாயகரமான நோய்கள்,மரணங்கள் என்பவற்றைக் குறைத்தல்
2. நஞ்சியல் மற்றும் தேசிய விஷத் தரவுகள் நிலையத்தின் வகிபாகம் வினைத்திறன் மிக்கதாக எவ்வாறு மேற்படி நோக்கத்தை அடைவதற்கு பங்காற்ற முடியும் என்பது பற்றி சகல தரப்பினருக்கும் விழிப்புணர்வூட்டல்
3. இந்த தடுப்பு நடவடிக்கையின் பொருட்டு சம்பந்தப்பட்ட சகல தரப்பினருடனும் இணைந்து ஒரு திட்டத்தைத் தயாரித்து அதனை நடைமுறைப்படுத்தல்.
4. காலத்தின் தேவையாக, உணவு மற்றும் சுற்றாடல் விஷத்தன்மையடைதல் சம்பந்தமாகவும் அவற்றைக் குறைத்துக் கொள்வது தொடர்பாகவும் மக்களை விழிப்பூட்டல்.

விஷத் தடுப்பு வாரத்தினுள் செய்யப்படுவதற்காக முன்மொழியப்பட்ட செயற்பாடுகள் :

1. பதவியணியினரையும் சமூகத்தையும் விழிப்பூட்டும் வகையில் கல்வி தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்கள், செயற்திட்டங்கள் என்பவற்றை நிறுவனத்தில் சமூகமட்டத்தில் ஒழுங்கு செய்தல்.உதாரணம்:- கல்வி தொடர்பான விரிவுரைகள் கண்காட்சிகள் நடை பயணங்கள்.
2. நஞ்சியல் மற்றும் தேசிய விஷத்தரவுகள் நிலையத்தின் சேவையைப் பெறும் முகமாக பொது மக்களை தெளிவுபடுத்தி விழிப்புணர்வூட்டும் நோக்குடன் மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தின் பொருட்டு இலத்திரனியல் மற்றும் எழுத்து ஊடகங்களின் பிரதிநிதிகளுடன் இணைந்து அவர்களின் சேவையைப் பெறுதல்.
3. தேசிய நிலையத்தினால் நடைமுறைப் படுத்துவதற்கு முன் மொழியப்பட்ட செயற்பாடுகள் தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கு பற்றும் மற்றும் அனுசரணை வழங்கும் பல்வேறு பிரதிநிதிகளிடமிருந்து அபிப்பிராயங்களையும் ஆலோசனைகளையும் பெறுதல்.
4. இந்த சுற்றறிக்கையில் காட்டப்பட்டுள்ளவாறு நாடளாவிய ரீதியில் முறையாக மக்களை விழிப்பூட்டும் வகையில் நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல். தொடர்பாக மற்றும் சுற்றாடலுக்கும் பொது மக்களின் சுகாதாரத்திற்கும் கேடான தீங்குகளைக் குறைத்தல்.
5. "தேசிய விஷத்தடுப்பு வாரம்" செயற்படுத்தப்படும் காலப்பகுதியில் பொருத்தமான அறிவித்தல் ஒன்றை பதவியணியினரை விழிப்பூட்டும் வகையில் நிறுவனத்தினுள் காட்சிப்படுத்துதல்.

இதன் பொருட்டு தேசிய விஷத்தடுப்பு வாரம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் விபரமான அறிக்கை ஒன்று சுகாதார கல்வி அலுவலர்களால் அச்செயற்பாடுகள் முடிவடைந்த பின்னர் பணிப்பாளர்/தொற்றா நோய்கள் பிரிவிற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

இது தொடர்பில் ஆகக்குறைந்தது பொருத்தமான நிகழ்ச்சித்திட்டம் ஒன்றையாவது சுகாதார வைத்திய அதிகாரி, மாவட்ட வைத்திய அதிகாரி பொது வைத்தியசாலை,போதனா வைத்தியசாலை மட்டங்களில் நடாத்தப்படல் வேண்டும். இந்த வேலைத்திட்டத்தை ஒழுங்கு செய்துள்ள கொழும்பு தேசிய வைத்தியசாலையில் தாபிக்கப்பட்டுள்ள தேசிய நஞ்சியல் மற்றும் விஷத்தரவுகள் நிலையத்திலிருந்து இது தொடர்பான மேலதிக விபரங்களையும்,தொழில்நுட்ப விடயங்களையும் பெற்றுக் கொள்ள முடியும்.

தொலைபேசி இலக்கம் - 2686143 / 691111 நீடிப்பு இலக்கம் - 2430

சுற்றறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ள இணைப்பில் வழங்கப்பட்டுள்ள கொள்கை அடிப்படையிலான விடயங்களை சமூக நிகழ்ச்சித் திட்டங்களுக்கான வழிகாட்டுதலாக பயன்படுத்துமாறு வேண்டப்படுகின்றீர். சம்பந்தப்பட்ட உமது பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் பற்றிய அறிக்கை 2013 நவம்பர் 25 ஆம் திகதிக்கு முன்னர் தேசிய நஞ்சியல் மற்றும் விஷத்தரவுகள் நிலையத் தலைவருக்கு அனுப்பப்பட வேண்டும்.

இச்சுற்றறிக்கையை சகல அலுவலர்களின் கவனத்திற்கு கொண்டு வருவதற்கும், இச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் செயற்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துமாறும் நீர் வேண்டப்படுகின்றீர்.

வைத்தியர். பி.ஜி. மஹிபால.
சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகம்,
சுகாதார அமைச்சு.

Dr. P. G. Mahipala
Director General of Health Services
Ministry of Health,
385, "Suwasiripaya",
Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10.